# செய்தி வெளியீடு

செய்தி வெளியீட்டுஎண்.10/2023 நாள் : 16.02.2023

**<u>சென்னைக் குடிநீர் வாரியத்தின் பகுதி-14 (பெருங்குடி) மற்றும் பகுதி-15 (சோழிங்கநல்லூர்) பகுதிகளில் கழிவுநீரை முறைகேடாக வெளியேற்றிய தனியார் கழிவுநீர் வாகனங்கள் பறிமுதல்.</u>**

**<u>சென்னை குடிநீர் வாரியம் நடவடிக்கை</u>**

சென்னை குடிநீர் வாரியத்தின் பகுதி-14(பெருங்குடி) மற்றும் பகுதி-15 (சோழிங்கநல்லூர்) பகுதிகளில் கழிவுநீரை முறைகேடாக வெளியேற்றிய தனியார் கழிவுநீர் வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

திறந்தவெளி மற்றும் நீர்நிலைகளில் மலக்கசடு, கழிவுநீர் மற்றும் பிற கழிவுகளை வாகனங்கள் மூலமாக முறையற்ற முறையில் வெளியேற்றுவதை தடுக்கவும் மற்றும் முறையான சுத்திகரிப்பை உறுதிசெய்ய தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் மற்றும் சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 34/2022) செயல்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. அதனடிப்படையில், சென்னை குடிநீர் வாரியத்தில் உரிமம் பெற்ற வாகனங்கள் மூலம் மட்டுமே வாரியத்தின் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் கழிவுநீர் உந்து நிலையங்களில் கழிவுநீர் வெளியேற்றப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், தனியார் கழிவுநீர் லாரி உரிமையாளர்கள் கழிவுநீர் வெளியேற்றுவதற்கான உரிமம் பெறுவதற்கான விண்ணப்பங்களை அனைத்து மண்டல அலுவலகங்களிலும் பெற்று பூர்த்தி செய்து, சென்னை குடிநீர் வாரியத்தின் 22 இடங்களில் செயல்படும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் கழிவுநீர் உந்து நிலையங்களில் கழிவுநீரை வெளியேற்ற வேண்டும் என ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் 15.02.2023 அன்று சோழிங்கநல்லூர் பகுதியில் ஒக்கியம்மடுவு அருகில் முறைகேடாக கழிவுநீரை திறந்தவெளியில் வெளியேற்றிய இரண்டு தனியார் கழிவுநீர் வாகனங்கள் சென்னை குடிநீர் வாரிய அதிகாரிகளால் பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் பகுதிகளில் பறிமுதல் செய்யப்பட்டு தலா ரூ.25,000/- வீதம் மொத்தம் ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக, அனைத்து மண்டலங்களிலும் சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு கழிவுநீர் வாகனங்களின் செயல்பாடுகள் கண்காணிக்கப்பட்டு வருகிறது. கழிவுநீரை திறந்தவெளிகளிலோ அல்லது நீர்நிலைகளிலோ வெளியேற்றுவது கண்டறியப்படும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட தனியார் லாரி உரிமையாளர்களுக்கு அபராதம் விதிக்கப்படுவதோடு மட்டுமல்லாமல் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்